**கவனிக்க.-** *2015.02.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1904 - 2015 පෙබරවාරි මස 27 වැනි සිකුරාදා - 2015.02.27

*1904 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 226 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 238 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மாசி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மடு | (காக்கையன் குளம்) மடுப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |

2-662

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, பங்குனி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | கேகாலை | மாவத்தபற்று தெற்குப் பிரிவின் பிறப்பு மற்றும் பரணகுரு கோறளைப் பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை |

2-708

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, பங்குனி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | ஹொரணை | உடுவ பிரிவின் பிறப்பு மற்றும் ரைகம் கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

2-709

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | குருநாகல் மாவட்டத்தின் வேஉடவில்லி ஹத்பற்று பிரிவின் மல்லவபிட்டிய பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல் |

2-822

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, மாச்சு மாதம் 30 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தொலுவ | உடபலாத பிரிவின் கலுகமுவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

2-823

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரப்படை பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணபிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2015.05.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத் தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும்.

(அ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 10,500 ரூபா ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 8,400 ரூபா.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(2) அடிப்படைச் சம்பளத்தின் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு.

(ஈ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் ஒப்படைக்கும் கடைசித் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/தமிழ் மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங் களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப் படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

கீழ்க்காணும் தகுதியுள்ள பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பதாரர் சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தப்படும் :-

* அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்தினால் 3 வருட மோட்டார் தொழில் நுட்ப கற்கைநெறி இருப்பதுடன் அத்துறையில் 3 வருட அனுபவம்.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டி யுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் சற்று குறைவாக

இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) தொழில் தகைமைகள் :

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள், போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(ஊ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் பாதுகாப்பு உதவி (SA) உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

- பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**6. தொழில்சார் பரீட்சை - பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி :**

6.1 இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்
(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்
(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 தொழில்சார் பரீட்சை.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகளும் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று மொத்தப் புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

**7. மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச கரும மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பயிற்சிநெறியில் சித்தி அடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

10. **பதவியிலமர்த்தும் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளை களுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோ கத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) தெரிவுசெய்யப்பட்ட திருமணமாகாத பொலிஸ் உத்தியோகத் தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006 ஆம் இலக்க 2007.08.09 ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;
(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப் படுத்தி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்ப தாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி -
விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராமசேவகர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி :-----.
(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----.
(சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

16. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

17. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களின் பிரதியை இணைக்குக :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

19. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

20. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

21. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை யென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

2-770/ 1

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2015.05.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப் பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 -17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும்.

(அ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(2) அடிப்படைச் சம்பளத்தில் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு.

(ஈ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் (SA) விண்ணப்பங்கள் ஒப்படைக்கும் கடைசித் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய் மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத்

தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் பாதுகாப்பு உதவி (SA) உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

- உடற்தகுதிப் பரீட்சையில் அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களைக் உள்ளடக்கியது. அவை :

(அ) 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;

(ஆ) பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்).

6. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரசகரும மொழித் தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பயிற்சிநெறியில் சித்தி அடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் கால அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளை களுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோ கத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க 2007.08.09 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதி யுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சி யினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப் படுத்திய பின் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப் படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராமசேவகர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் ரிசேவ் சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது ரிசேவ் பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. நீங்கள் தற்போது ரிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை

யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

2-770/2

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

வனப் பாதுகாப்புத் திணைக்களம்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்ட வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்ட வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள அளவுத்திட்டம்** :

(i) பயிற்சித் தரம்.- முதலாம் வருடம் மாதமொன்றிற்கு ரூபா 12,920. இரண்டாம் வருடம் மாதமொன்றுக்கு ரூபா 13,040 கொடுப்பனவாகச் செலுத்தப்படும்.

(ii) II **ஆ வகுப்பு**.- MN3-2006A ரூ. 15,005 - 4 x 80 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூ. 27,885 ஆகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(iii) பயிற்சித் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ;

(iv) வட்ட வன உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதிகளிலுள்ள கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் எந்தவொரு நிலைமையிலும் பணிக்கப்படும் பிரகாரம் பணியாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் ;

வட்ட வன உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்கு அமைவாக மேற்குறிப்பிடப் பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக அவர்கள் பல கடமைகளையும் செய்வதற்கு நேரிடலாம். விசேடமாக, காடுகளில் மரங்கள் மற்றும் வனவியல் பொருட்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வனக்குற்றங்கள் சம்பந்தமாக சோதனையிடல், வனக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கைது செய்தல், கைது செய்தவர்களையும் உரிய வனவியல் பொருட் களையும் நீதிமன்றங்கள் முன் முன்னிலைப்படுத்துதல் போன்ற கடினமானதும், எச்சரிக்கை மிக்கதுமான பணிகளும் இதில் அடங்கும். அநேகமாக அரசாங்க விடுமுறை தினங் களிலும் இரவு நேரங்களிலும்கூட இந்த உத்தியோகத்தர் களுக்கு இவ்வாறான கடமைகளில் தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுவதற்கும் நேரிடலாம்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு வட்ட வன உத்தியோகத்தர்களின் கடமைகள் கடினமானதும் எச்சரிக்கை மிக்கதுமாகையினால் பெண்கள் இப்பணிகளில் ஈடுபடுவது செயல்முறை ரீதியாக கடினமாக இருக்கலாம்.

(v) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற வட்ட வன உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் (தமிழ் மொழி மூலம்) நிரப்பப்படும்போது உரிய பிரதேசங்களில் வசிக்கின்ற, தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சையில் சித்தியடைகின்ற தமிழ் மொழி மூல விண்ணப்ப தாரிகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் ;

(vi) இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு அத்துடன் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வட்ட வன உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவி உயர்வுத்திட்டம் (திருத்தம்) பிரிவுகள் ஏற்புடையதாகும் ;

(vii) வர்த்தமானி அறிவித்தலில் (IIஅ) பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும்போது இயைபுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும் ;

(viii) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இதற்கமைவாக 1997.03.31 ஆந் திகதியன்று அல்லது இதற்கு முன்னரான 1985.03.31 ஆந் திகதியன்று அல்லது இதற்குப் பின்னர் பிறந்துள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதி உண்டு. ஏற்கனவே அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் பணியாற்றுகின்றவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

*4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைத் திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-*

(i) விலங்கியல், தாவரவியல், விவசாயம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உயர்) தரம் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயிரியல் அல்லது விவசாயம் பாடத்துடன் மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ii) மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/ கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படுகின்ற திகதியன்று இந்தத் தகைமைகள் எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(iv) எல்லா பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உள மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*6. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.-* (i) மேலே 4 ஆம், 5 ஆம் பந்திகளின்கீழ் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற/ உள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.result.exams.gov.lk இணையத் தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

(ii) மேலே 6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள/ நிலவுகின்ற இறுதி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் சிலர் இருப்பின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) மேலே 6.1 இன்கீழ் தகுதி பெற்று தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற இரண்டு வருட செயல் முறை மற்றும் கட்டமைப்பு ரீதியான பயிற்சிநெறியை திறம்படப் பூர்த்தி செய்து (NVQ-6) சித்தியடைந்ததன் பின்னர் இலங்கை தொழில்நுட்ப சேவையில் III ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவர்.

(iv) மேலே 6.1 இன்கீழ் தகுதிபெற்று தெரிவுசெய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தாவரவியல் பரிசோதனை (உயர் மட்டம்) சித்தியடைந்ததன் பின்னர் மூன்று (03) வருட திருப்திகரமான சேவைக்காலத்தின் பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.

7. **பாடவிதானம்**.- எழுத்துமூல பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(i) உளச்சார்பு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் விவேகத்தையும் பகுப்பாய்வையும் தீர்மானிக்கும் சக்தியை மதிப்பிடும் நோக்கில் பல்வகை சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் ஐம்பது (50) வினாக்களைக் கொண்டதாக அமையுமென்பதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தலும் வேண்டும்.

(ii) தொழில்நுட்ப வினாத்தாள் (காலம் : இரண்டு (2) மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள் :
இந்த வினாத்தாள் வன வளங்கள் மற்றும் இதன் வாழ்வாதாரங்கள் தொடர்பில் ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிய அறிவு, இலங்கையின் சுற்றாடல் அறிவு, புவியியல் முக்கியத்துவம் தொடர்பிலான அறிவு, இலங்கை கமத்தொழில் பொருளாதாரம் தொடர்பிலான அறிவு, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, வனப் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பிலான முக்கிய தகவல்கள் -இதன் பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பிலான புரிந்துணர்வு, இயற்கை சுற்றாடல், காடுகள் மற்றும் தாவரங்கள் தொடர்பிலான அறிவு, காடுகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பிலுள்ள முக்கியத்துவம், புவியியல் தொடர்பிலான அடிப்படை அறிவு (பூமியின் வடிவம் மற்றும் புவியியல் காரணிகள் போன்றன) மற்றும் விண்ணப்பதாரியின் பொது அறிவு தொடர்பில் மதிப்பிடும் நோக்கிலான வினாத்தாள். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும் :-**

(i) இந்த விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கியவாறு செ. மீ. 21 X 29 (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பப்படிவங்கள் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தில் தமது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘பயிற்சித்

தரத்தைச் சேர்ந்த வட்ட வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015'' எனக் குறிப்பிட்டு 2015.03.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது). பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்வசம் வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும் ;

(ii) பூர்த்திசெய்யப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப்பத்திரங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப் படும் ;

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது ;

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது தரைப்படை, கடற்படை, விமானப் படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தரினால் அல்லது பொலிஸ் சேவையின் வர்த்தமானி அறிவித்தலில் விளம்பரப்படுத்திய பதவியொன்றை வகிக்கின்ற உத்தியோ கத்தரினால் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது தான் வசிக்கும் பிரிவின் கிராம உத்தியோகத்தரால் உறுதிப் படுத்துதல் வேண்டும் ;

(v) இந்த விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(vi) அரசாங்க சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் தனது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தகுதி யானவரென தெரிவுசெய்யப்படுமிடத்து இந்தத் திணைக் களத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு இணங்குவ தாகவும் தெரிவித்தல் வேண்டும் ;

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

*9.* **பரீட்சைக் கட்டணங்கள் :**

(i) பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2013-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைத்து நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட உரிய பற்றுச் சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும்) ;

(ii) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை யொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது ;

*10.* **பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லா வற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :**

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்) ;
(iv) நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(v) பிற உரிய சான்றிதழ்கள்.

**கவனிக்க வேண்டியது**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

*11.* **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும் :**

(i) பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்று வதற்கு எதிர்பார்க்கின்ற நகரம் அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமான அளவு விண்ணப்பிக்காத விடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படு கின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத விடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ii) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத் தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தி னால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து தினங்களுக்கு முன்னர் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவுடன் உசாவுதலைச் செய்தல் வேண்டும். இவ்வாறு உசாவுதலைச் செய்யும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத் தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்

திக்கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும் ;

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் விநியோகம் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

12. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.**- பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.**- தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கத்திற்கு உட்படுவார்.

14. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரிய வருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காடு பேணுநர் தலைமை அதிபதி.

வனப் பாதுகாப்புத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வனப் பாதுகாப்பு திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்ட வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

Open Competitive Examination for Recruitment to the Post of Forest Officer in The Training Grade of the Sri Lanka Technological Service of the Department of Forest - 2015

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைவாகப் பூர்த்தி செய்யவும்.)

1. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

2. (i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----
.
(உ-ம் : Guanawardhana, M. G. B. S.K.)
(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. (i) அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

4. ஆணா/ பெண்ணா ?
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. (i) பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி
(ii) 2015.03.31 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பிரஜாவுரிமை :
பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

8. தொலைபேசி இலக்கம் :

9. **கல்வித் தகைமைகள்**.- கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சை :

*1 ஆம் முறை*
வருடம் : பரீட்சை இல. :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

10. கல்விப் பொதுத்தராதர (உ. த.) பரீட்சை :

வருடம் : பரீட்சை இல. :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. வேறு கல்வித் தகைமைகள் :----.
12. தொழில்சார்/வேறு தகைமைகள் :----.
13. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

14. (i) தாங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக் காகவாவது நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா?

ஆம்/இல்லை

(ii) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

15. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் :

(i) நிறுவனம் :----.
(ii) முதல் நியமனத் திகதி :----.
(iii) பதவி :----.
(iv) சம்பளம் :----.

16. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) :----.
(ii) :----.

17. **விண்ணப்பதாரியின் பிரகடனம்** :
இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னரும் இவ்வாறு தெரியவருமிடத்து நட்டஈடு இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துவதும் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(ஒப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முன்னிலையில் ஒப்பமிடல் வேண்டும்.)

திகதி :----.

18. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** :
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .............................. நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2015,................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை) :----.

19. **விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக்களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்திசெய்தல் வேண்டும்** :
திரு./திருமதி/செல்வி .................................. இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/அலுவலகத்தில் ...................................... ஆக நிரந்தர/தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து இந்தத் திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----. (இலச்சினையை இடுக.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு/ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்களை அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

**அட்டவணை**

*பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர எண்களும்*

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

2-841

---

**விளையாட்டுக்கள் அமைச்சு**

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்
விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாட நெறி – 2015/2016

விளையாட்டுக்கள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18-35 (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களினை விட மேற்படாது இருத்தல் வேண்டும்.) வருடங்களுக்கு இடைப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 அத்துடன் அவர் -

(அ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியொன்றில் முதலாம் இடத்தை பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய வீர முதன்மைப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் அல்லது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல் ;

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சில் அல்லது அதன் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது மாகாண சபைகளின் விளையாட்டு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுதல் ; அல்லது கல்வி அமைச்சின் விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக கடமையாற்றுதல் (வகுப்பு 1இன் பிரகாரம் உரிய தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும் ;

அல்லது

(ஊ) அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான ஆசிரியராக அல்லது ஆசிரியையாக இருத்தல் அல்லது பயிற்றுவிப்பாளராக இருத்தல் (தொண்டராகச் சேவை யாற்றுதல் கவனத்திற்கொள்ளப்படும்). உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு மைதான ஆலோசகராக இருத்தல், இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டு உத்தியோகத்தராக இருத்தல் ;

மற்றும்

5 வருட சேவைக்கால அனுபவத்தைப் பெற்று இருப்பதுடன் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில் பெற்றுக்கொண்ட விளையாட்டு பயிற்றுவித்தல் படிநிலை அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் ;

அல்லது

(எ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்பு பிரிவில், பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், விளையாட்டு அல்லது உடற்பயிற்சி ஆலோசகராக 6 மாதங்களுக்குக் குறையாத ஆரம்ப மற்றும் உயர்தர பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பயின்று பூர்த்தி செய்திருத்தல்.

**முக்கிய குறிப்பு :**

(1) விளையாட்டு அமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 1 வருட சேவைக்காலத்தினையும் கல்வி அமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 5 வருட (கல்வியியற் கல்லூரிகளின் உடற்கல்வி ஆசிரிய பயிலுநர்களுக்கு மாத்திரம் 2 வருடங்கள் சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்) சேவைக் காலத்தினையும் பூர்த்தி செய்திருக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

(2) உரிய முறையில் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**2. விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முறை :**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை போல் 8" ×13 ½" அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து 2015.03.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ''பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி - 2015/2016 தொடர்பான விண்ணப்பப்படிவம்'' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3 அரசாங்க, உள்ளூராட்சிச் சேவை மற்றும் கூட்டுத்தாபனங் களில் பணியாற்றும் அலுவலர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக் கப்படும்.

2.4 பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ காசுக் கட்டளையாக ''செயலாளர், விளையாட்டு அமைச்சு'' எனும் பெயருக்கு கறுவாக்காடு தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டை விண்ணப் பப்படிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**3. தேர்ந்தெடுக்கும் முறை.**- இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அனைவரும் எழுத்து மூலப்பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக்கான குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற் தகைமைகாண் செயல்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் உட்படுத்தப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

**4. பாடநெறி தொடர்பான விபரங்கள்:**

4.1 இப்பாடத்திட்டமானது பின்வரும் 05 பிரிவுகளை உள்ளடக்கிய தாகும் :

(அ) பயிற்றுவித்தலின் பொதுக்கோட்பாடுகள் (உடற் தகைமை கள் மற்றும் திறன்கள், நுட்ப முறைகள், உபாய வழிகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச்சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய் மூலப் பரீட்சை) ;

(ஆ) ஆகக் குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவு.

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ) சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்கள் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்துகொள்ளும் ஒரு விளையாட்டுத் தொடர்பான நிபுணத்துவம்.

(உ) விளையாட்டு, உடற்றொழிலியல், விளையாட்டுச் சமூக விஞ்ஞானம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2. பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களால் பாடநெறிக் கட்டணமாக 30,000 ரூபாவினை, பாடநெறியானது தொடங்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத் தினை செலுத்தி நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது, காசோலையாக செலுத்தப்படுமாயின் ''செயலாளர், விளையாட்டு அமைச்சு'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங் கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4 பாடநெறியினைப் பயிலுவதற்கு தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு அமையச் செயற்படுவதற்கு கட்டுப்பட்டவராவர்.

4.5 பாட நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு ''விளையாட்டு டிப்ளோமா''ச் சான்றிதழ் வழங்கப்படும்.

**5. ஏனைய நிபந்தனைகள் :**

5.1. பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த அமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2 இருப்பினும் பாடநெறியைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டுமென இவ்வமைச்சு

கருதும் பட்சத்தில் அதற்கு அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அது தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 07,
2015, பெப்புருவரி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

*விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி - 2015/2016 ஆம் ஆண்டு*

1. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(iii) முழுப் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. சொந்த முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.

3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

(ii) 2014.12.31 ஆந் திகதியன்று வயது:-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

4. இலங்கைப் பிரஜையா? இல்லையா? என்ற விபரம் :-----.
இலங்கைப் பிரஜையாயின் பதிவின் மூலமா? அல்லது பரம்பரையினாலா? என்ற விபரம் :-----.

5. (i) பால் (ஆண்/பெண்) :-----.
(ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

6. நீங்கள் தொழில் செய்பவரா? இல்லையா? என்ற விபரம் :-----.
(i) பதவி :-----.
(ii) சேவைக்காலம் :-----.
(iii) சேவை நிலையம் :-----.

7. கல்வித் தகைமைகள் :
(i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை :
வருடம் :-----.
பரீட்சைச் சுட்டெண் :-----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தரப் பரீட்சை :
வருடம் :-----.
பரீட்சைச் சுட்டெண் :-----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

வேறு கல்வித் தகைமைகள் :

(iii) உயர் பரீட்சைகள்/பட்டம் :
வருடம் :-----.
பரீட்சைச் சுட்டெண் :-----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் விளையாட்டு சான்றிதழ்கள் மற்றும் விசேட சாதனைகள் பற்றி இங்கு குறிப்பிடவும். சகல சான்றிதழ்களினதும் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்பவும்) :

(1) பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட 16 வயதிற்கு மேற்பட்ட அடைவுகள் :----.
(2) தேசிய விளையாட்டுப் பெருவிழா அடைவுகள் மாவட்ட/மாகாண/தேசிய :----.
(3) தேசிய சங்கங்களின் மூலம் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளில் அடைவுகள் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல் :----.
(4) சர்வதேச மட்டத்திலான பங்குபற்றுதல்கள் :----.

9. வர்த்தமானி அறிவித்தலின் 1.2 பந்தியில் உள்ளவாறு எந்தப் பிரிவின்கீழ் என்பதனைக் குறிப்பிடுக :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |

10. வேறு குறிப்புகள் :-----.

11. குருந்துவத்த தபால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட 500 ரூபாவிற்கான பற்றுச்சீட்டு இலக்கம் :-----. (செயலாளர், விளையாட்டு அமைச்சு எனும் பெயருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

12. இந்தப் பாட நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான ரூபா 30,000 ஐ செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :-----.

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மை யானவை எனவும், சரியானவை எனவும், நான் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இப்பாடநெறியை கற்பதற்கு தகுதியற்றவராகக் கருதப்பட்டு பயிற்சிப் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

..........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

*(அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்)*

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,

.................................. இல் ...................... ஆகக் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ........................ அவர்களது விண்ணப்பப் படிவத்தைச் சிபார்சு செய்து முன்னிலைப்படுத்துவதுடன், இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாட நெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்து கின்றேன்.

........................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பதவி முத்திரை :-----.
பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

2-714

---

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

*கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு - 2015*

கத்தோலிக்க மறை பாடசாலைகளுக்காக கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு 2015 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுக்கேற்ப இத்தேர்வுக்கான விதிமுறைகளும் பாடத்திட்டமும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

1. பரீட்சை நிலையங்கள்.- நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பிரதான நகரங்களை அண்மித்ததாக பரீட்சை நிலையங்களைத் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

2. மொழி.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடைபெறும். இவற்றில் பரீட்சார்த்தி விரும்பிய யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்.

3. தகைமை.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவன வற்றில் ஏதேனும் ஒரு தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் :

3.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் தேர்வில் சித்தி ;

3.2 தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வு அல்லது மறையாசிரியர் சிறப்புத் தேர்வு அல்லது மறையாசிரியர் கௌரவ பட்டத் தேர்வில் சித்தி ;

3.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உ. த.) தேர்வில் கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரீக பாடத்தில் சித்தியுடன் பாடங்கள் மூன்றிலும் சித்தி ;

3.4 கத்தோலிக்க மறைப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்த அல்லது கத்தோலிக்க திருமறை பாடத்தில் திறமைச் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைப்பத்திர அல்லது தேசிய பொதுத் தராதர பரீட்சையில் (இரு அமர்வுகளுக்குள்) சித்தி ;

3.5 கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கத்தோலிக்க மறைப் பாடசாலையொன்றில் மறையாசிரியராக ஒரு வருடமாவது கற்பித்த அனுபவம்.

**குறிப்பு :**

(1) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேலே 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களில் ஒன்றாவது பெற்றுள்ளாரென்பதை, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட மறைப் பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது பங்குத் தந்தையினால் உறுதிசெய்யப்படல் வேண்டும்.

(2) இப்பரீட்சைக்கு கத்தோலிக்க மறைப் பாடசாலை அதிபர் அல்லது பங்குத்தந்தை மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தனிப்பட்ட ரீதியில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

4. **பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய முறை**.- இப்பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றுவோரிடம் பணம் அறவிடப்பட மாட்டாது. இருப்பினும் பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையல்லாத விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.

5. **பரீட்சை பற்றிய விபரம்**.- இப்பரீட்சை ஐந்து (5) வினாத்தாள் களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாத்தாளுக்கும் உரிய காலம் மூன்று (3) மணித்தியாலங்களாகும். அந்த ஐந்து வினாத்தாள்களும் :

(1) திருவிவிலியம் ;
(2) திருவழிபாடும் அருளடையாளங்களும் ;
(3) திருச்சபை வரலாறு (உலக, இலங்கைத் திருச்சபை வரலாறு)
(4) மறைக்கல்வி ;
(5) திருச்சபையின் சமூகக் கண்ணோட்டம் (திருச்சபை படிப்பினைகள்).

6. **பரீட்சை முடிவுகளை வெளியிடுதலும் சித்திபெறுவதைத் தீர்மானித்தலும்** :

6.1 இத்தேர்வில் சித்திபெற வேண்டுமாயின் 5 பாடங்களிலும் சித்திபெற வேண்டும். அவ்வாறு சித்தி பெற்றோருக்கு கத்தோலிக்க மறைக்கான மறையாசிரியர் சான்றிதழ் வழங்கப்படும் ;

6.2 இவற்றில் ஒரே தடவையில் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் சித்திபெறாமல் ஏனைய நான்கு பாடங்களிலும் சித்திபெற்ற பரீட்சார்த்தி நூன சித்தி (Referred) பெற்றவராகக் கருதப்படுவார். நூன சித்தி பெற்ற பரீட்சார்த்தி பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தொடர்ந்து வரும் மூன்று (3) வருடங்களுக்குள் நூன சித்தி பெற்ற பாடத்திற்குத் தோற்றி சித்திபெற்றால் பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்பட்டு மேற்படி சான்றிதழைப் பெறுவதற்கு தகுதியுடையவராவார். இவ்விதம் நூன சித்தி பெற்ற பாடத்திற்கு விண்ணப்பிக்கும்போது ஏனைய பாடங்களில் சித்திபெற்ற பரீட்சை வருடத்தையும் தமது சுட்டெண்ணையும் பெற்ற பெறுபேற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

7. **வினாத்தாள் அமைப்பு** :

* ஒவ்வொரு வினாத்தாளும் I, II, III ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமையும் ;

* பகுதி I இல் சுருக்கமாக விடையளிக்க வேண்டிய 10 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு (4) புள்ளிகள் வீதம் புள்ளி வழங்கப் படும் (4 x 10 = 40 புள்ளி) ;

* பகுதி II இல் கட்டமைப்பு வினாக்கள் ஐந்து (5) உள்ளன. அவற்றில் விரும்பிய நான்கு (4) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 12 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் (12 x 4 = 48 புள்ளி) ;

* பகுதி III இல் கட்டுரை அமைப்பு வினாக்கள் இரண்டு (2) உள்ளன. அவற்றில் விரும்பிய ஒரு வினாவுக்கு விடையளிக்க வேண்டும். அதற்கு 12 புள்ளிகள் வழங்கப்படும். (1 x 12 = 12 புள்ளி) ;

8. **சித்திபெறுவதைத் தீர்மானிக்கும் நியதிகள்** :

* ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப் படும் ;

* சித்தி பெறுவதாயின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற வேண்டும் :

| புள்ளி பரம்பல் | தரம் |
|---|---|
| 0 - 39 | F |
| 40 - 54 | S |
| 55 - 69 | C |
| 70 - 100 | D |

9. **விடைத்தாள் மீள் பரிசீலனை செய்தல்**.- பெறுபேறுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவத்தை நிரப்பி உரிய மறைப் பாடசாலை அதிபர் மூலம் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்குரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10. **பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும்**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் தேர்வுக்காக பாடத்திட்டமும் மாதிரி வினாக்களும் தொடர்பாக "இயக்குநர், தேசிய மறைக்கல்வி நடுநிலையம், 'லங்காரம்', பெல்கம் பிளேஸ், கொழும்பு 8" என்ற முகவரியோடு தொடர்புகொள்ளவும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளரின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப் படும்.

பரீட்சை ஆணையாளர்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015.02.12.

2-774

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக, பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்காக பொருத்தமான தகைமையுடைய இலங்கை யரிடமிருந்து விண்ணப்பங்கள் 2015, பெப்புருவரி 15 ஆந் திகதி முதல் 2015, மாச்சு 15 ஆந் திகதிவரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றினால் பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிகளுக்கு பிரயோகிக்கத்தக்க பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களில் கீழ்வரும் பாடநெறிகள் இரத்மலானையிலுள்ள ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் :

* மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் இளமாணி (எம்.பி.பி.எஸ்.) பட்டம் - ஐந்து (5) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், பொறியியலில் - நான்கரை (4 1/2) வருடம் ;
* சட்ட இளமாணி (எல்.எல்.பி.) - நான்கு (4) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானங்கள் - மூன்று (3) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் - மூன்று (3) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், சமூக விஞ்ஞானங்கள் - மூன்று (3) வருடம்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில் கீழ்வரும் பாடநெறிகள் நடாத்தப்படும் :

* கட்டடக் கலையில் இளமாணி - ஐந்தரை (5 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) (கௌரவ) பட்டம், கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல் - நான்கரை (4 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், கட்டியெழுப்பப் பட்ட சுற்றாடல் - மூன்றரை (3 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) (கௌரவ) பட்டம், கணிய அளவையியல் - நான்கரை (4 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், கணிய அளவையியல் - மூன்றரை (3 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) (கௌரவ) பட்டம், அளவையியல் விஞ்ஞானம் - நான்கரை (4 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், அளவையியல் விஞ்ஞானம் - மூன்றரை (3 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், தகவல் தொழில்நுட்பம் - நான்கரை (4 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், தகவல் முறைமைகள் - நான்கரை (4 1/2) வருடம் ;
* விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) பட்டம், கணினி விஞ்ஞானம் - நான்கரை (4 1/2) வருடம் ;

3.1 பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்கள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

3.2 பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு,

* மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் இளமாணி (எம்.பி.பி.எஸ்.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி பொறியியல் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* சட்டமாணி (எல்.எல்.பி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி முகாமைத்துவம் மற்றும் தொழில் நுட்ப விஞ்ஞானங்களில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி தேவைகள், விநியோகங்கள் ஒழுங்க மைப்பு முகாமைத்துவத்தில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி சமூக விஞ்ஞானங்களில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* கட்டடக் கலையில் இளமாணி (B Arch) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் (பி.எஸ்.சி.) (கௌரவ) பட்டம் அல்லது

* விஞ்ஞானமாணி கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி கணிய அளவையியலில் (பி.எஸ்.சி.) கௌரவ பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி கணிய அளவையியலில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி அளவையியல் விஞ்ஞானத்தில் (பி.எஸ்.சி.) கௌரவ பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி அளவையியல் விஞ்ஞானத்தில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பத்தில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி தகவல் முறைமைகளில் (பி.எஸ்.சி.) பட்டம் அல்லது
* விஞ்ஞானமாணி கணினி விஞ்ஞானத்தில் (பி.எஸ்.சி.) பட்டம் வழங்கப்படும்.

3.3 சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் தேருநர்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயிலுதல் வேண்டும் :-

(அ) **மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல்மாணி (எம். பி. பி. எஸ்.) பட்டப் பாடநெறி.- கால எல்லை ஐந்து (5) வருடம் பயிலிளவல் (ஆண்/பெண்) அலுவலர்கள்.-** 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) **விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) குடிசார்/இயந்திர/எந்திர மின்னணு/உயிர் விஞ்ஞான/பொறிமுறை மின் மற்றும் இலத்திரனியல்/இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு/கடல்சார்/விமான பராமரிப்பு மற்றும் விமான இயந்திர பொறியியல் பட்டப் பாடநெறிகள்.- கால எல்லை.- நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்கள்) :**

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில்) குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(இ) **சட்டமாணி (எல்.எல்.பி.) பட்டப் பாடநெறி.- கால எல்லை.- நான்கு (4) வருடம் (பயிலிளவல் (ஆண்/பெண்) அலுவலர்கள்.-**

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் :

| | |
|---|---|
| கணக்கியல் | புவியியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | இரசாயனவியல் |
| சிங்களம்/தமிழ் | ஜேர்மன் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | இரசாயனவியல் |
| பாளி | அரபு |
| பௌத்தம் | நாடகமும் அங்கியலும் |
| இந்து சமயம் | இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் |
| அரசியல் விஞ்ஞானம் | உயிரியல் |
| வரலாறு | பொருளியல் |
| ஆங்கிலம் (பாட இல. 73) | பௌதிகவியல் |
| ஜப்பானிய மொழி | சமஸ்கிருதம் |
| விவசாயத் தொழில் நுட்பவியல் | சீன மொழி |
| கிரேக்கம் | இந்து நாகரிகம் |
| வியாபாரக் கற்கைகள் | இணைந்த கணிதம்/ கணிதம் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | இலத்தின் |
| கிறிஸ்தவ நாகரிகம் | பௌத்த நாகரிகம் |
| பிரெஞ்சு | கிரேக்க உரோம நாகரிகம் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |

(ஈ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானங்களில் பட்டப் பாடநெறி.- கால எல்லை : மூன்று (3) வருடம் (பயிலிளவல் (ஆண்/பெண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(உ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவத்தில் பட்டப் பாடநெறி.- கால எல்லை : மூன்று (3) வருடம் (பயிலிளவல் (ஆண்/பெண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு அல்லது வர்த்தகப் பிரிவு பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஊ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) சமூக விஞ்ஞானங்களில் பட்டப் பாடநெறி.- கால எல்லை : மூன்று (3) வருடம் (பயிலிளவல் (ஆண்/பெண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று (3) பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடைய வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(எ) கட்டடக் கலையில் (B Arch) பட்டப் பாடநெறி : கால எல்லை ஐந்தரை (5 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல் (கௌரவ) பட்டப் பாடநெறி.- கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல் பட்டப் பாடநெறி.- கால எல்லை : மூன்றரை (3 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடைய வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(i) குறைந்தபட்சம் பின்வரும் பாடங்களில் ஒரு பாடத்தில் :

உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதிகவியல்
இணைந்த கணிதம்
சித்திரக் கலை
புவியியல்

அத்துடன்

(ii) பின்வரும் அட்டவணையில் ஒரு பாடத்தில் அல்லது அதற்கு மேல் :

| | |
|---|---|
| கணக்கியல் | சீன மொழி |
| இந்து நாகரிகம் | மனைப் பொருளியல் |
| வணிகப் புள்ளி விபரவியல் | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இஸ்லாமிய நாகரிகம் | கணிதம் |
| கிரேக்க உரோம நாகரிகம் | சமஸ்கிருதம் |
| அரசியல் விஞ்ஞான மூலகங்கள் | ஜேர்மன் |
| ஆங்கிலம் (பாட இல. 73) | அரபு |
| சிங்களம் | வரலாறு |
| கிறிஸ்தவ நாகரீகம் | வியாபாரக் கற்கைகள் |
| தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | ஜப்பானிய மொழி |
| ஹிந்தி | பொருளியல் |
| பௌத்த நாகரீகம் | பாளி |
| பிரெஞ்சு | தமிழ் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | |

அத்துடன்,

(iii) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (சி) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் சாதாரண (எஸ்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

(iv) கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் இடஞ்சார்ந்த அறிவுச் சோதனையில் (spatial cognition test) சித்தியடைதல் வேண்டும்.

விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) கணிய அளவையியலில் (கௌரவ பட்டப் பாடநெறி.- கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) கணிய அளவையியலில் பட்டப் பாடநெறி.- கால எல்லை : மூன்றரை (3 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப் பிக்க முடியும்.

பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது ஏதாவது ஒரு பாடத்திலும்,

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | உயர் கணிதம் |

அத்துடன்,

கீழே குறிப்பிடப்படும் அட்டவணையிலிருந்து ஏனைய பாடத்திற்கு/பாடங்களுக்கு தோற்றி சித்திபெற்றி ருத்தல் வேண்டும் :

| | | |
|---|---|---|
| கணக்கியல் | பொருளியல் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| வியாபாரக் கற்கைகள் | பௌதிகவியல் | இரசாயனவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |

இதற்கு மேலதிகமாக அபேட்சகர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப் பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(i) கணிதம் I அல்லது II பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் (சி) சித்தியொன்று ;

(ii) விஞ்ஞானம் I அல்லது II பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண (எஸ்) சித்தியொன்று ;

(iii) ஆங்கிலப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (சி) சித்தியொன்று.

(ஐ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) அளவையியல் விஞ்ஞான (கௌரவ) பட்டப் பாடநெறி : கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) அளவையியல் விஞ்ஞான பட்டப் பாடநெறி : கால எல்லை : மூன்றரை (3 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, இணைந்த கணிதப் பிரிவு மற்றும் ஏதாவது அங்கீகரிக்கப் பட்ட பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக் கழக அனுமதிக்கான தகைமை யுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஒ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) தகவல் தொழில்நுட்பப் பட்டப் பாடநெறி : கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று (3) பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடைய வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஓ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) தகவல் முறைமைகள் பட்டப் பாடநெறி : கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று (3) பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடைய வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஔ) விஞ்ஞானமாணி (பி.எஸ்.சி.) கணினி விஞ்ஞானப் பட்டப் பாடநெறி : கால எல்லை : நான்கரை (4 1/2) வருடம் (பயிலிளவல் (ஆண்) அலுவலர்கள்)

2014 ஆம் ஆண்டு அல்லது 2013 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல் (ஆண்/பெண்) உத்தியோ கத்தர்கள் அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் பாடங்களைக் கட்டாயமாகப் பின்பற்றுதல் வேண்டும்.

3.6 இவற்றுக்கு மேலதிகமாக தமது பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் போது, பௌதீக அபிவிருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் அவர்கள் வேண்டப்படுவர்.

**4. பயிலிளவல் (ஆண்/பெண்) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள்.**- தேருநர்கள் :-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 2015, மாச்சு 15 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

**கல்வித் தகைமைகள் :**

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடப் பிரிவில் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் :

அத்துடன்

(i) சாதாரண பொதுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(ii) சகல பட்ட நிகழ்ச்சிகளுக்கும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (சி) பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) சட்டமாணிப் பட்டப் பாடநெறியினைப் பயிலுவதற்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (சி) பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) குறைந்தபட்சம் பின்வரும் பௌதிக நியமங்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும் :

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| உயரம் | தரைப்படை | 5'6" | 5'3" |
| | கடற்படை | 5'6" | 5'3" |
| | விமானப்படை | 5'6" | 5'4" |
| நிறை | தரைப்படை | 50 கி. கி. | - |
| | கடற்படை | 52 கி. கி. | 41 கி. கி. |
| | விமானப்படை | 17 <BMI< 25 | 17 <BMI< 25 |
| மார்பளவு | | 32" (விரியாத) | - |

**குறிப்பு.**- விளையாட்டுத் துறையில் அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளில் முதன்மையான சாதனைகளைத் தேருநர் கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் மேற்படி பௌதிக நியமங்கள் தளர்த்தப் படலாம்.

(உ) சிறந்த ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஏற்கனவே கூறப்பட்ட தேவைப்பாடு களுக்கு மேலதிகமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரி னது திருப்திக்கு ஏற்ப மருத்துவச் சோதனையில் சித்தியடையு மாறு தேருநர் வேண்டப்படுவர்.

(ஊ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (பயிற்சியின்கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கும் அத்துடன் படை ஒழுங்குவிதிகளின்கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் பயிலிளவல் (Cadet) (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

**5. சேவை நிபந்தனைகள்.**- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கத்திய வளாக பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்ளாக தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள் ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்தொடரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின்கீழ் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்படுவார்கள். சேர்த்துக்கொள்ளப்படும் அபேட்சகர்கள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான 12 வருடங்களுக்குக் குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவை யாற்றுதல் வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள்ளும் நேரத்தில், சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் பட்டத்தைப் பெற்ற பின்னர் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட படையில் இணைப்புச் செய்யப்பட்ட பின்னர், பிரயோகிக்கத்தக்கவாறு கட்டாயமான காலமொன்றுக்கு சேவையாற்றுவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்கு உரிய வேதனமும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 30,000 கொண்ட சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகள் கிடைக்கச் செய்யப்படும் :-

- (i) உணவு மற்றும் தங்குமிடம் ;
- (ii) மருத்துவ வசதிகள் ;
- (iii) சீருடைகள் ;
- (iv) அதிகாரியின் வேலையாள் வசதிகள் ;
- (v) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டதன் மீது, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்:-

- (i) தகைமைப்படி ;
- (ii) பங்கீட்டுப்படி ;
- (iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக் கான படி (திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்) ;
- (iv) சீருடை பராமரிப்புப் படி.

(ஆ) பின்வரும் வசதிகள் வழங்கப்படும்/படிகள் கொடுப்பனவு செய்யப்படும் :

- (i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இலவச தங்குமிட வசதி ;
- (ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி ;
- (iii) சீருடைப்படி ;
- (iv) திருமணமான அலுவலருக்கு அதிகாரியின் வேலையாள் படி/திருமணமாகாத அலுவலருக்கு அதிகாரியின் வேலையாள் சேவைகள் ;
- (v) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கு பணியாற்றும் இடத்திலிருந்து வீடு இருக்கும் நிலையம் வரை ஒரு மாதத்துக்கு ஒரு மீளத்திரும்பும் கடமை ஆணைச்சீட்டு.

9. அவர்களது சம்பள எதிர்நோக்கல்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் தரைப்படை, கடற் படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்கள் ஆட்சிப்படுத்தப்படுவார்கள் :-

- (i) தரைப்படை/கடற்படை/விமானப்படையின் வேதனச் சட்டக் கோவை ;
- (ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்;
- (iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப்படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக் கோவை.

10. பயிற்சியின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாக உப வேந்தரினாலும் அத்துடன்/அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்கள் வேண்டப்படுத்தப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. **மொழித் தேவைப்பாடுகள்**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. **ஆளடையாளத்தை நிரூபித்தல்**.- தேருநர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இருந்து இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை பதவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இணையத்தளம் www.kdu.ac.lk.

16. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும்போது, "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல

பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை, இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 ஐ (ஆயிரம் ரூபா) தொகையினைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட **பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்**. அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உப வேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக்குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களிடையே பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

17. சரியாகப் பூர்த்திசெய்யபட்ட விண்ணப்பங்கள் 2015, மாச்சு 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உறையின் மேல் இடது மூலையின் மீது "பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" மற்றும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவு என்பவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

18. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத் தாபனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

19. பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி தகுதிக்கான பெறுபேற்றுத்தாள் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

20. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு வினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப்பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களைக் கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்குற்றுமாறு வேண்டிக்கொள்ளப்படுவார்கள்.

21. நேர்முகப் பரீட்சைகளுக்கும் ஏனைய சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக் கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.

22. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். தேருநர் ஒருவரை தெரிவுசெய்வதற்காக எவ்வழியிலேனும் தூண்டுதல் அல்லது தாக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாகக் கருதப்படும்.

23. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத் தினால் அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்பட மாட்டாது.

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

2-849

---

## இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதிபெறும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிப் பரீட்சை 2015, யூன் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு இணங்க திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

3. இதன் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்தப் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 145 ஆகும். நியமன நடைமுறைக்கு வரும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் பதவி வெற்றிடங்களை அல்லது அனைத்துப் பதவி வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது

4. நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீனர் களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகுதிபெறும் அங்கவீனமுடைய ஆட்களிலிருந்து அதிக புள்ளி மட்டத்தைப் பெறும் 3% மாத்திரம் இதற்காகத் தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்களின் புள்ளி மட்டம் ஆகக்குறைந்தது 50 மாதம் ஆகக் காணப்படுதல் வேண்டும். நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்படும் பரீசார்த்திகள் நிபுணத்துவ மருத்துவர் பரிசோதனைச் சபை யொன்றின் முன்னிலையில் அழைக்கப்படுவதுடன் நிபுணத்துவ மருத்துவ அறிக்கையொன்றின் மூலம் தமது அங்கவீன நிலையையும்

அது குறித்த பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக அமைய மாட்டாது என்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. **சம்பளம்**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.12.26 ஆந் திகதிய 1894/26 ஆம் இலக்க வர்த்தமானி மற்றும் 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பவற்றுக்கு இணங்க, இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் தரம் 2-II மற்றும் 2-I என்பவற்றுக்குரிய சம்பளத் திட்டம் ரூபா 17,680 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 ரூபா 31,645 (MN-6-2006-A) ஆகும். ரூபா 21,245 இற்கு மேல் செல்வதற்கு வகுப்பு 2 இன் I இற்குத் தரமுயர்வு பெறுவது அவசிய மாகும்.

6. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

7. **தகைமைகள்**.- இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம்-II இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குப் பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன் அடிப்படையில் 1994.03.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1980.03.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின் பிறந்த திகதியினைக் கொண்டவர்களுக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதி உண்டு) ;

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் உள்ளே எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(உ) கல்வித் தகைமைகள் :

(1) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் அல்லது கணினி விஞ்ஞான/தகவல் தொழில்நுட்ப பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது கணினி விஞ்ஞானத்தை/ தகவல் தொழில் நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (இங்கு முழுப் பட்டத்தில் ஆகக்குறைந்தது 1/3 பகுதி கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில் நுட்பம் தொடர்பானதாகக் காணப்படுவது அவசியமாகும்.) ;

அத்துடன்

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர் பான பட்டப்பின் டிப்ளோமா பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(3) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்ட மொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது கணினி விஞ்ஞான/ தகவல் தொழில்நுட்ப பட்டப்பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(4) (i) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய தொழிற் தகைமையில் (NVQ) ஏழாம் (7) ஆம் மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் ;

அத்துடன்

(ii) உரிய துறையில் இரண்டு (02) வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு** :

(i) இங்கு 7.0 (உ) 4 (ii) இல் குறிப்பிடப் பட்டுள்ள தொழிற் தகைமையை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றி தழ்களின் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தனியார் துறையில் ஏதேனும் தொழி லைச் செய்கின்றபோது கிடைத்த தொழில்சார் அனுபவம், நிறுவனத் தின் வர்த்தகப் பதிவிலக்கம், விண்ணப் பதாரரின் ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் என்பன அடங்கிய கடித

மொன்றின் மூலமும் உரிய நியமனக் கடிதங்களின் மூலமும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அரசாங்கத் துறையில் தொழில் புரிகின்ற சந்தர்ப்பத்தில் தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருப்பின் உரிய திணைக்களத் தலைவரின் உறுதிப் படுத்தல் கடிதத்தின் மூலமும் பணிக் கடமைப் பட்டியல் மூலமும் அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் அனைவரும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

8. **பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடத்திட்டம்** :

8.1 இப்பரீட்சை மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் ஊடக மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

8.2 பரீட்சைக்குரிய பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன :

| | பாடங்கள் | காலம் | அதிக பட்சப் புள்ளிகள் | சித்தியடைதற்குப் வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (1) | தகவல், தொடர் பாடல் தொழில் நுட்பம் | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| (2) | உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| (3) | பொது நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40 |

8.3 (1) *தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சை*.- பரீட்சார்த்தியினது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கோட் பாடுகள், கணினிக் கட்டமைப்பும் செயற்படுத்தல் முறையும், மென்பொருள் (சொல்முறை, பரவு தாள்கள், விளக்கக் காட்சி, தரவுத் தள முகாமைத்துவம் மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் வேறு மென்பொருள் பொதிகள்) வன்பொருள், தரவுத் தொடர்பாடலும் கணினி வலையமைப்புக்களும், சர்வதேச வலைப் பின்னல் இணையத்தள வடிவமைப்பும் மற்றும் புதிய வலைப்பின்னல் சேவைகளும், மின்னஞ்சல், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களது வாழ்க்கை வட்டம் போன்ற துறைகளில் காணப்படுகின்ற அறிவையும் மேற்பார்வை செய்யும் ஆற்றலையும் பரீட்சித்துப் பார்க்கின்ற வினாக்களை உள்ளடக்கிய வினாத்தாளாகும். இவ்வினாத்தாள் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடை அளிக்கும் மாதிரியிலான வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) *உளச்சார்பு*.- பரீட்சார்த்தியின் புள்ளி விபரவியல் ஆற்றலினையும் மற்றும் தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைக்கும் அறிவினையும் பரீட்சித்தல் தொடர்பான வினாக்கள் இவ்வினாத்தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வடிவிலான (50) வினாக்களைக் கொண்டிருப்பதோடு அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது அவசியமாகும்.

(3) *பொது நுண்ணறிவு*.- புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக் கட்டமைப்புக்கள், உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான அறிவு, பொருட்கோடல் திறமை, வேறு நிலைமைகளுக்கு உரித்தாக்கிக் கொள்ளத்தக்கதான ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்திக்குள்ள அறிவு மட்டத்தை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடை அளிக்கும் மாதிரியிலான வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வடிவிலான (50) வினாக்களைக் கொண்டிருப்பதோடு அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது அவசியமாகும்.

**குறிப்பு**.- சேவைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான பரீட்சார்த்தியின் தகைமையையும் ஆற்றலையும் சோதித்தறியக்கூடிய வகையில் இவ்வினாப் பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்தபோதிலும், ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் தலா ஒவ்வொன்றிலும் 40% புள்ளிகளைப் பெறுவதுடன் பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது 50% புள்ளிகளைப் பெறுவது அவசியமாகும். எல்லா விடைப்பத்திரங்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை பூர்த்திசெய்யப்படும் விதத்தில் பெற்ற புள்ளிகளின் ஒழுங்குமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

8.4 நிரப்புவதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கைப் பரீட்சார்த்திகளை உள்ளடக்கும் விதத்தில் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள், மொத்தப் புள்ளிகள், தேர்ச்சி ஒழுங்கு என்பன அடங்கிய பெறுபேறு தனிப்பட்ட முறையில் அனுப்பப்படும்.

நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களில் போதியது என்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அதிகபட்சப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் தகைமைகளைச் சோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அப்பரீட்சை நடாத்தப்படும் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

9. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவங்களை நிரப்பும்போது மிகவும் கவனமான முறையில் உண்மையான தகவல்களை வழங்குவது அவசியமாகும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என்று தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுகின்றபோது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும். ஒரு விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை என ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இத்தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பாகிய 2003-02-13 இற்கு எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்திலும் செலுத்த முடியும். அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூட்டினுள் கழறாத விதத்தில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது அவசியமாகும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.

11. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 x 29 செ. மீ.) (சாதாரண ஹாஃப் சீட்) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(அ) 1 முதல் 3 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) 4 இல் இருந்து இறுதி வரையான பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் விதத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்களைத் தயாரிக்கின்றபோது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழியிலான விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்களும் சரியான முறையில் நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பாமையினால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்திசெய்யும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை ஒத்ததாக உள்ளதாக என்பதை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவது இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதுவதாக அமைய மாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று சோதிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து அப்பரீட்சைக்கான பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

13. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

14. வெளிவாரியான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பங்கள், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர், 2,40,360 ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

15. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015, மாச்சு மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

**பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிப்பது அவசியமாகும். அவ்வாறு விசாரிக்கின்றபோது தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுவது

அவசியமாகும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியில் வதியும் ஒருவராக இருப்பின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை உடனடியாகப் பெற முடியுமான விண்ணப்பதாரர்களின் தொலைநகல் இலக்கங் களையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி அது தொடர்பில் விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கின்றபோது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப் பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை/பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பில் அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய தற்கான பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

16. பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவ தற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடி யாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

17. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுவதற்கு காரணமாக அமைய மாட்டாது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடப்பது கட்டாயமானதாகும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

18. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சைகளுக்குப் பொதுவான சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படக் கடமைப் பட்டுள்ளனர்.

19. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் உள்ள அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு இணங்கச் செயற்படுவது அவசியமாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, பெப்புருவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

Open Competitive Examination for Recruitment to Class 2 Grade II of Sri Lanka Information & Communication Technology Service - 2015

(தரப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீட்டை/இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்.)

☐
(அலுவலகப் பயன்பாட்டுக்காக மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

* நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்திக்கு இணங்க அங்கவீனர் புனர்வாழ்வு நிபந்தனை களின் கீழா ?

ஆம் - 1
இல்லை - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

(இப்பகுதிக்கு அங்கவீன விண்ணப்பதாரர்கள் மாத்திரமே "ஆம்" எனப் பதிலளிக்க வேண்டும் என்பதனால் நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியை நன்றாக வாசிப்பது பொருத்தமானதாகும்.)

1. 1.1 விண்ணப்பதாரரின் பெயர், (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) முதலெழுத்துக்களுடன் :----.
உதாரணம்- GUNAWARDHANA M. G. B. S. K.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் : ஆண்-0, பெண்-1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

*3.3* பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

*3.4* விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் திகதியில் வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

*3.5* தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. கல்வித் தகைமைகள் :

*4.1* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்றிருப்பின்-

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் :----.
(iii) பட்டம் பயன்வலுப் பெறும் திகதி :----.
(iv) பிரதான பாடங்கள் :

(1) :----.
(2) :----.
(3) :----.
(4) :----.

*4.2* பட்டப்பின் பட்டம், பட்டப்பின் டிப்ளோமா ஏதும் இருப்பின்,

(i) பல்கலைக்கழகத்தின்/நிறுவனத்தின் பெயர் :----.
(ii) பட்டப்பின் பட்டத்தின், பட்டப்பின் டிப்ளோமாவின் பெயர் :----.
(iii) பட்டப்பின் பட்டம்/டிப்ளோமா பயன்வலுப் பெறும் திகதி : ----.

*4.3* தகவல் தொழில்நுட்பம் தொடர்பான (NVQ மட்டம் 7) அல்லது மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பட்டங்கள் இருப்பின்,

(i) பாடநெறியின் பெயர் :----.
(ii) பாடநெறியைப் பயின்ற நிறுவனம் :----.
(iii) பாடநெறி பயன்வலுப் பெறும் திகதி :----.
(iv) பாடநெறிக் காலப்பகுதி (மணித்தியாலங்களில்) :----.

5. தொழில் அனுபவமும் ஏனைய தகைமைகளும் :

*5.1* தொழில் அனுபவம் :

| அனுபவம் பெற்ற நிறுவனம் | காலம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

*5.2* வேறு தகைமைகள் :----------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள்,

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை கழறாத விதத்தில் அதன் ஒரு விளிம்பை இங்கு ஒட்டுக. |
|---|

7. நீங்கள் எப்போதேனும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்ற மொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? : ----.

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)
(ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.)

ஆம் ☐ இல்லை ☐

8. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில், என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை என்று கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்ட வற்றில் ஏதேனும் ஒரு பகுதியை நிரப்பாமையினாலும் பிழையாக நிரப்பியமையினாலும் ஏற்படக்கூடிய இழப்புக் களை பொறுப்பேற்பதாக உடன்படுகின்றேன். மேலும் அனைத்துப் பகுதிகளையும் சரியான முறையில் பூர்த்தி செய்திருப்பதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகை பொய் யானது என்று நிரூபிக்கப்படுமிடத்து, நியமனத்திற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும் வெளிப்படுத்து கின்றேன்.

இங்கு குறிப்பிட்ட தகவல்களில் எந்தவொன்றையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் யொப்பம்.
(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.)

திகதி :----.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் ................................. ஆந் திகதி தனது

கையொப்பத்தை இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத் தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோக முத்திரையினை இடவும்.)

10. **தாபனத் தலைவரின் சிபார்சு**.- (விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................................... என்பவர் இத்திணைக்களத்தில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடைய பதவி ஒன்றில் கடமையாற்றுகின்றார் என்றும் இப்பரீட்சைக்கான அறிவுறுத்தல்கள் பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிப்பு வழங்க முடியும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையினை இடவும்.)

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

2-848

---

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015(I)

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சை தொடர்பில் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகக் கடமைப் பட்டவராவர்.

2. விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2015.03.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்னை, மஹரகமை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2015(I)'' என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கட்டணமும் இல்லை. அதன் பின் தோற்றுவதாயின் 200 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒரு பாடத்துக்கு தோற்றுவதாயின் 50 ரூபா பெறுமதியான முத்திரையையும் ஒட்டி அதன் மீது கையொப்பமும் திகதியும் இட்டு அந்த முத்திரையை பாவனையற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் ''பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மஹரகம'' என்னும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் பெயரும் பதிவு இலக்கமும் திகதியும்.

5. **பரீட்சைத் திட்டம்** (இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்றவாறு) :

(I) நிதிப்பிரமாணங்கள்.- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் தொகுதி I (X ஆம் அத்தியாயம் தவிர)

(II) *தாபனவிதிக்கோவை.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள் ; அத்துடன்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி II இன் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) *மருத்துவமனை நிருவாகம்.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) மருத்துவமனை தொடர்பிலுள்ள பொதுவான விதிகளும் ஒழுங்குவிதிகளும் ;

(ii) மருத்துவமனையைச் சுத்தமாக வைத்திருத்தல் ;

(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(iv) நோயாளிக்கான பொருத்தமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள் ;

(v) மருந்து உற்பத்தி நிலைய நிருவாகம் ;

(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகள் ;

(vii) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் கனிஷ்ட ஊழியர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு ;

(viii) மருத்துவமனை தொடர்பில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் ;

(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக ஒழுங்குவிதிகள் ;

(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் ;

(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை

(IV) *அரச கரும மொழி வாய்மொழிப் பரீட்சை.-* (சிங்களம்/ தமிழ்) (15 நிமிடங்கள்) :

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல் ;

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் விடை கூறுதல் ;

(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல் ;

(ஆ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல் ;

(இ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெறவேண்டும்.

பீ. எஸ். கே. ஆர். வீரக்கோன்,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்னை,
மஹரகமை,
2015.02.02.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

ஆயுர்வேத மருத்துவ சேவையின் அலுவலர்களுக்கான
வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2015(I)

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - S
தமிழ் - T [ ]
(பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) Mr./Mrs./Miss :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதவும்) :----.

4. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில் எழுதவும்) :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (i) கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

7. கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

8. (i) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றி பின்வரும் பாடத்திலோ அல்லது பாடங்களிலோ சித்தியடைந்துள்ளீரா ? : நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ மருத்துவமனை நிருவாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்) அவ்வாறாயின் பரீட்சை சுட்டெண்ணையும் திகதியையும் குறிப்பிடுக :----.

11. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா ? :----.

பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதவிடத்து ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரை ஒட்டும் பகுதி

முழுப்பரீட்சைக்காக 200 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக முத்திரையை ஒட்டக்கூடாது.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு எனவும் சான்று பகர்கின்றேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ரூபா ............................................ பெறுமதியான முத்திரை/முத்திரைகள் செல்லுபடியானவை எனவும் முன்னர் உபயோகிக்கப்படாதவை எனவும் நான் உறுதிமொழியளிக்கின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................................ எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் இவர் தெரிந்தவர் என்றும் ...................................... .................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

2-698

---

திருத்தம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கு மாணவர்களைத் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை - 2014

**2015/2017 கல்வியாண்டின் பொருட்டு கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி**

2014.11.21 ஆந் திகதிய 1890 ஆம் இலக்கத்தினைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு (2014) உரிய விண்ணப்பங்கள் கோரப்படல் 2015.01.16 ஆந் திகதிய 1898 ஆம் இலக்கத்தினைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக 2015.01.23 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது அவ்விண்ணப்பங் கோரலின் முடிவுத் திகதி 2015.03.11 ஆந் திகதி வரை மேலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

டாக்டர் ஏ. சிவஜோதி,
மேலதிக பணிப்பாளர் நாயகம் (க. பா.).

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் (பதிலாக),
2015, பெப்புருவரி 13.

2-844